## 29.22 காலியாக உள்ள இடங்களில் புதியதாக மக்கள் நலப்பணியாளர்களை நியமித்தல்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.90 நாள் : 20.05.1999

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண்.496, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள் 02.09.1989
2. அரசு ஆணை (நிலை) எண்.256, ஊரக வளர்ச்சி (மதி1) துறை, நாள் 13.07.1991
3. ஒருங்கிணைப்பாளர், முதலமைச்சர் அலுவலகம் அவர்களது நேர்முக கடித எண்.294/992, நாள் 29.03.1999.
4. ஊரக வளர்ச்சித் துறை, அரசாணை நிலை எண்.79, நாள் 26.04.1999.

**ஆணை**

தற்போது காலியாக உள்ள மக்கள் நலப் பணியாளர்கள் இடங்களை நிரப்புதவற்கான வழிறைகளைப் பற்றியும், 1989–1991– ஆம் ஆண்டில் மக்கள் நலப்பணியாளர்களாகப் பணியாற்றி மீண்டும் 15.09.1997–ல் பணியமர்த்தப்படாத மக்கள் நலப்பணியாளர்கள் பற்றியும் அரசு கவனமாக ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடுகிறது.

2. மக்கள் நலப் பணியாளர்கள் திட்டம் 1989–1991– ஆம் ஆண்டில் பார்வை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1989–1991–ம் ஆண்டில் நடைமுறையிலிருந்த இத்திட்டத்தை உடனடியாக நீக்கி பார்வை 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் இத்திட்டத்திற்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டது. இந்த ஆணையில் ஏற்கனவே பணியமர்த்தப்பட்டு பணியிழந்த மக்கள் நலப்பணியாளர்களுக்கு இப்பொது கொண்டு வரப்படும் திட்டத்தில் பணிபுரிய வாய்ப்பு வழங்க வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளதாகவும், எனவே இந்தத் தகுதிகளைப் பெற்றவர்கள் மீண்டும் பணியமர்த்தப்பட வேண்டுமெனவும் ஆணை வெளியிடப்பட்டது.

3. பார்வை 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின் முக்கிய நோக்கமே 1989–1991– ஆம் ஆண்டு மக்கள் நலப்பணியாளர்களாக நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதால் மக்கள் நலப் பணியாளர்கள் திட்டத்திற்கு புத்துயிர் அளிக்கப்பட்டு, 1989–1991–ம ஆண்டில் மக்கள் நலப் பணியாளர்களாகப் பணியாற்றியும் மீண்டும் விரும்பி விண்ணப்பித்தும், 15.09.1997–க்குள் இவ்வாறு நியமனம் அறிக்கப்படாவதவர்களுக்கு கல்வி மற்றும் வயது தகுதிகளை மறுபரிசீலினை செய்யாமல் இவர்களுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மக்கள் நலப் பணியாளர்களாக உடனடியாக 30.06.1999–க்குள் மறுநியமனம் அளிக்க வேண்டும் என்று அரசு ஆணையிடுகின்றது.

4. முன்பத்தி 3–ல் குறிப்பிட்டுள்ளவாறு மக்கள் நலப் பணியாளர்கள் மறு நியமனம் செய்யப்பட்ட பின் அம்மாவட்டத்தில் காலியாக உள்ள மக்கள் நலப் பணியாளர்களின் இடங்களின் எண்ணிக்கையை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும்.

5. ஊரக வளர்ச்சி இயக்குநர் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெற்ற காலியிடங்களின் விவரங்களை தொகுத்து அரசுக்கு உடனடியாக அனுப்ப வேண்டும்

6. காலியாக உள்ள இடங்களில் புதியதாக மக்கள் நலப் பணியாளர்களை நியமிப்பதற்கான முறை, வயது மற்றும் கல்வித் தகுதிகளை வரையறுத்து அரசு கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

(1). ஒவ்வொரு வட்டார அளவிலும் மக்கள் நலப் பணியாளர்களை தேர்வு செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரை, தலைவராகவும், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களை உறுப்பினராகவும் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரை உறுப்பினர் செயலராகவும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்.

(2). இந்தக் குழு நேர்காணல் முறை மூலமாக கீழ்க்கண்ட தகுதிகள் கொண்ட நபர்களை மக்கள் நலப் பணியாளர் பதவிகளுக்கு தேர்வு செய்ய வேண்டும்.

(3). மக்கள் நலப் பணியாளராக நியமனம் பெறுவதற்கு கீழ்க்கண்ட தகுதிகளை விண்ணப்பதாரர்கள் 15–7–99 பிற்பகல் அன்று பெற்றிருக்க வேண்டும்.

(அ). 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதைக் கடக்காமலும் இருக்க வேண்டும்.

(ஆ). கல்வித் தகுதியாக 10–ம் வகுப்பு முடித்திருக்க வேண்டும். அதாவது பத்தாம் வகுப்பிற்கு அரசால் நடத்தப்படும் பொதுத் தேர்வு எழுதி, தேர்ச்சி பெறாதவர்கள்.

(இ). மலைவாழ் மற்றும் பழங்குடியினத்தவர் 8–ம் வகுப்புவரை முடித்திருக்க வேண்டும். அதாவது, எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெறாதவர்கள்.

7. முன்பத்தி 6–ல் ஆணையிடப்பட்டுள்ளது போல், காலியாக உள்ள இடங்களில் புதியதாக மக்கள் நலப் பணியாளர்களை நியமிப்பதற்காக செய்தி அறிக்கையை உள்ளூர் தினத்தாள்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 01.07.1999 அன்று வெளியிட வேண்டும். 15.07.1999 பிற்பகல் வரை மாவட்ட ஆட்சியர்கள் அலுவலகத்தில் பெறப்படும் என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும். மாவட்ட ஆட்சியர்களால் வெளியிடப்பட வேண்டிய செய்தி அறிவிக்கையின் நகல் ஒன்று இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

8. இந்த ஆணையை அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தவறாது செயல்படுத்த வேண்டும்.

9. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.1376/JS/P/99, நாள் 15.04.1999–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.மாலதி**
அரசு செயலாளர்

**இணைப்பு**

**ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணை (நிலை) எண்.90, நாள் 20.05.1999**

**அரசு அறிவிக்கை**

**மக்கள் நலப் பணியாளர்கள் புதிய நியமனம்**

**விண்ணப்பங்கள் கோருதல்**

1. மக்கள் நலப் பணியாளராக நியமனம் பெறுவதற்கு கீழ்க்கண்ட தகுதிகளை 15.07.1999 பிற்பகல் அன்று பெற்றிருக்க வேண்டும்.

(அ). 18–வயதிற்குக் குறையாமலும் 30 வயதைக் கடக்காமலும் இருக்க வேண்டும்.

(ஆ). கல்வித் தகுதியாக 10–ம் வகுப்பு முடித்திருக்க வேண்டும். அதாவது பத்தாம் வகுப்பிற்கு அரசால் நடத்தப்படும் பொதுத் தேர்வு எழுதி, தேர்ச்சி பெறாதவர்கள்.

(இ). மலைவாழ் மற்றும் பழங்குடியினத்தவர் 8–ம் வகுப்பு வரை முடித்திருக்க வேண்டும். அதாவது எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெறாதவர்கள்.

2. இத்தகுதிகளைப் பெற்றிருப்பவர்கள் 15.07.1999 பிற்பகலுக்கு முன் அவர்களது விண்ணப்பங்களை கருதுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும். 15.07.1999 பிற்பகல் வரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே நியமனத்திற்காக கருதப்படும்.

3. மக்கள் நலப் பணயாளர்களாக தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்படுபவர்களுக்கு நடைமுறையிலுள்ள அரசாணையின்படி மதிப்பூதியமும், பயணப்படியும் அளிக்கப்படும்.

4. ஒவ்வொரு வட்டார அளவிலும் மாவட்ட ஆட்சித் தலைவரை, தலைவராகவும், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) அவர்களை உறுப்பினராகவும் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரை உறுப்பினர் செயலராகவும் கொண்ட ஒரு குழு நேர்காணல் முறை மூலமாக மக்கள் நலப்பணியாளர்களை நியமனத்திற்காக தேர்வு செய்யும்.

**மாவட்ட ஆட்சித் தலைவர்**